மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

2026ம் வருடம் மார்ச் திங்கள் 26ம்நாள் வியாழக்கிழமை

அசல் வழக்கு எண்.172/2017

CNR Number : TNMD15-000196-2017

சாமி சின்னையன் .... வாதி

/எதிர்/

1. அடக்கி.
2. குமார்.
3. ரேணுகா.
4. தேன்மொழி.
5. சுதா. *(இறப்பு)
6. மாவட்ட ஆட்சியர், மதுரை.
7. வட்டாட்சியர், மேலூர்.
*8. பெருமாள்.
*9. மைனர். தனுசியா.
*10. மைனர். கிஷோர். ...பிரதிவாதிகள்

(மேற்படி மைனர்கள் தங்களது பாதுகாவலரும் தகப்பனாருமான 8ம் பிரதிவாதி பெருமாள் மூலமாக).

(Amended as Per Order in I.A.No.3/2023, 25.09.2023)

இவ்வழக்கு 09.03.2026ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.இராமசாமி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சேதுபதி அவர்கள் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பு தொடர்ந்து வழக்கை நடத்தாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 8 முதல் 10 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகாத நிலையில்

தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 5ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 6, 7ம் பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

தீர்ப்புரை

இந்த வழக்கானது தாவாப் பாதையில் உள்ள வாதியின் உரிமை மற்றும் அனுபவத்திற்கு 1 முதல் 5 பிரதிவாதிகளினாலும், அவர்களது வகை ஆட்களினாலும், எவ்வகையிலும் இடையூறோ, இடைஞ்சல்களோ ஏற்படாவண்ணம் 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும், தாவா வழக்கிடை சொத்திற்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரிலோ அல்லது அவர்களது குடும்பத்தினர் பெயரிலோ 6, 7 பிரதிவாதிகள் எவ்வித பட்டாவும் வழங்கிவிடாத வகையில் ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் இதர பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :–

2.1) தாவா வழக்கிடைச் சொத்து நத்தம் மனை இடமாகும். தாவா சொத்தானது பெரியசூரக்குண்டு கிராமத்தில் சர்வே எண்.329/1, 329/2–காலிமனையிடமான வாதிகள் புழக்கத்தில் உள்ள மெயின் ரோடுக்கு வந்து செல்லும் தென்வடல் பாதை ஆகும். மேற்படி, பாதையின் தென்வடல் நீளம் சுமார் 90 அடிகள், கிழமேல் சுமார் 7 அடிகள் அகலமும் உள்ள பகுதி ஆகும். மேற்படி, தாவா சொத்திற்கு மேற்கே புல எண்.328/28–ல் வாதிக்கு சொந்தமான இரண்டு சென்ட்ரிங் வீடுகள் உள்ளது. தென்புறம் உள்ள வீட்டுக்கும், தாவா பாதைக்கும் தெற்கே கிழமேல் மெயின்ரோடு செல்கிறது. மேற்படி, வாதியின் மற்றொரு வீடான வடக்குபுறம் உள்ள வீட்டிற்கு வாசல் தாவா பாதையை பார்த்து கிழக்கு பக்கமாக உள்ளது. வாதி தனது மகன்களுடன் மேற்படி, இரண்டு வீடுகளிலும், கூட்டுக்குடும்பமாக வசித்து

வருகிறார். வாதியின் இரண்டு மகன்கள் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து வருகிறார்கள். பணி நிமித்தமாக வெளியூர்களில் வசித்து வருகிறார்கள். இருப்பினும், அவ்வப்போது தனது பெற்றோர்களைப் பார்க்க விடுமுறை நாட்களில் வந்து செல்கிறார்கள்.

2.2) வாதியின் வீடுகளுக்கும் தாவா பாதைக்கும் கிழக்கே ஐந்து பிரதிவாதிகளுக்கும் இரண்டு வீடுகள் உள்ளது. 1ம் பிரதிவாதிக்கு, 2ம் பிரதிவாதி மகன் ஆவார். 3, 4, 5 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதியின் மூத்த மகன் முன்னமலையின் மனைவி ஆவார். 4ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் மனைவி ஆவார். 5ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியின் மற்றொரு மகனான பெருமாள் என்பவரின் மனைவி ஆவார். 6, 7 பிரதிவாதிகள் அரசு அலுவலர்கள். தாவா இடமும் அரசுக்கு சொந்தமாக இருப்பதால் வாதியும், 1 முதல் 5 பிரதிவாதிகளின் பெயரிலேயே அல்லது அவர்கள் குடும்பத்தினர் பெயரிலோ தாவா பாதைக்கு பட்டா வழங்காது இருக்கத்தக்கதாக வாதி கோருவதால், 6, 7ம் பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1ம் பிரதிவாதியின் மூன்று மகன்களில் மேற்படி, முன்னமலை மற்றும் பெருமாள் இருவரும் வெளிநாட்டில் வேலை செய்து வருவதாக வாதிக்கு தெரிய வருகிறது.

2.3) வாதியின் மேற்படி, இரண்டு வீடுக்கும் வடக்கே புல எண்.328/28-ல் காலி இடமும் அதில் குளியல் அறை மற்றும் கழிப்பிடமும், மாட்டுக்கொட்டமும் உள்ளது. வாதி தனது வீடுகளுக்கு தண்ணீர் வசதிக்காக மேற்படி, காலியிடத்தில் போர்வெல் அமைத்துள்ளார்.

2.4) வாதியின் வீடுகளுக்கும், தாவா பாதைக்கும் தெற்கே மேற்படி கிழமேல் மெயின்ரோட்டுக்கும் வடக்கே கழிவு நீர் வாய்க்கால் கிழமேலாக செல்கிறது. மேற்படி மெயின்ரோட்டிற்கும், தாவா பாதைக்கும் சென்றுவர ஒரு சிறிய கான்கிரீட் பாலம் வாதியால் சுமார் 12 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டு

வாதியின் புழக்கத்தில் உள்ளது.

2.5) வாதிக்கு தற்போது உள்ள சென்ட்ரிங் வீடுகள் கட்டுவதற்கு முன்பாக ஓட்டு வீடுகளாக இருந்தது. மேற்படி, ஓட்டு வீடுகளும், சுமார் 40 ஆண்டுகள் மிக பழைமை மிக்கதாக இருந்ததை மாற்றி தற்போது உள்ள வீடுகளை சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு கட்டியுள்ளார். வாதி மேற்படி, வீடுகளுக்கு மின் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார். தாவா பாதைக்கு பாலம் அமைத்து உள்ள இடத்தின் அருகே குடிநீர் குழாய் உள்ளது. பிரதிவாதிகளுக்கும், வாதிக்கும் சமீபகாலங்களாக மேற்படி, கழிவு நீர் வாய்க்கால் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டதில் மேற்படி, பாதையில் வாதியை உபயோகிக்க விடாமல் இருக்க எத்தணிக்கிறார்கள். எனவே, 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு இடையே அடிக்கடி பிரச்சனை ஏற்படுகிறது.

2.6) 1ம் பிரதிவாதியின் மகன்கள் வெளிநாட்டில் வேலை செய்து வருவதால், தங்களது பணச் செல்வாக்கை பயன்படுத்தி அவ்வப்போது மிரட்டி வருகிறார்கள். மேலும், வாதியின் மகன்கள் காவல்துறையில் பணிபுரிவதால், பொறாமை குணம் கொண்ட 1 முதல் 5 பிரதிவாதிகள் எப்படியும் பிரச்சனைகள் ஏற்படுத்தி வாதிக்கும், வாதியின் மகன்களுக்கும் இடையூறு செய்ய முயற்சித்து வருகிறார்கள்.

2.7) இந்நிலையில் கடந்த 17.05.2017ம் தேதியில் 1 முதல் 5 பிரதிவாதிகள் வாதியின் தாவா பாதைக்கு இடையூறு செய்து பிரச்சனை செய்ததால், மேலூர் காவல் நிலையத்தில் மேற்படி, பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்து வாதி, பிரதிவாதிகளை விசாரித்ததில் சிவில் சம்மந்தமான பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தை நாட அறிவுறுத்தப்பட்டார்கள். எனினும், 1 முதல் 5 பிரதிவாதிகள், வாதியிடம் தாவா பாதையை சுவர் எழுப்பி மறைத்து விடப்போவதாக கடந்த 06.06.2017ல் தெரிவித்தார்கள். அவ்வாறு தாவா பாதையை மறைத்து சுவர் எழுப்பினால் அது வாதிக்கு பெருத்த கஷ்ட, நஷ்டத்தையும் சொல்லொணாத்

துயரத்தை ஏற்படுத்தும், அதை எவ்வகையிலும் ஈடு செய்ய இயலாது. மேலும், தாவா வழக்கிடைச் சொத்தை பொறுத்து வாதிக்கே முதன்மை முதல் வழக்கும், முதல் நோக்கு வழக்கும் சித்தித்துள்ளது.

2.8) இந்த பிரதிவாதிகள் உடனே வாதிக்கும் அவரது மகன்களுக்கும், கேவியட் மனுவை அனுப்பினார்கள். வாதி 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் மற்றும் 1ம் பிரதிவாதியின் இருமகன்களுக்கும், கேவியட் அனுப்பியதில் அவர்கள் வெளிநாட்டில் இருப்பதாக தகவல்களுடன் திருப்பி வந்தது. 1, 2 பிரதிவாதிகளும் கேவியட் மனுவை பெறாமல் திரும்பி அனுப்பிவிட்டார்கள்.

2.9) வாதியின் வடக்குபுறம் உள்ள வீட்டுக்கு அதனை அடுத்து வடக்கே உள்ள கழிவறை, மாட்டுக்கொட்டம் மற்றும் குளியல் அறை, போர்வெல்லுக்கு என்று தாவா பாதையை தவிர வேறு பாதை கிடையாது. இந்த பிரதிவாதிகள் தாவா பாதையை இடையூறு செய்யும் விதமாக தங்களது வீடுகளை பாதையை 2 அடி ஆக்கிரமித்தும் கட்டியுள்ளார்கள். மேலும், ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் வாதியின் புழக்கத்தில் உள்ள பாதையை பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யாது இருக்க வாதி இந்த வழக்கை தாக்கல் செய்கிறார். மேலும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 6, 7 பிரதிவாதிகள் பட்டா ஏதும் வழங்காமல் இருக்க செயலுறுத்துக்கட்டளை கோரியும், வாதி இந்த வழக்கை தாக்கல் செய்கிறார். 1 முதல் 5 பிரதிவாதிகள் 6, 7 பிரதிவாதிகளிடம் பட்டா பெற முயற்சித்து வருகிறார்கள். ஆகவே, 1 முதல் 5 பிரதிவாதிகள் 6, 7 பிரதிவாதிகளுக்கு பட்டா வழங்கிவிட்டால், வாதிக்கு அது பெருத்த கஷ்ட, நஷ்டத்தை ஏற்படுத்திவிடும். இதுநாள் வரையில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 6, 7 பிரதிவாதிகள் தாவா பாதை சம்பந்தமான இடத்தில் எந்தவிதமான பட்டாவும் வழங்கவில்லை.

2.10) வாதியும், வாதியின் குடும்பத்தினரும் சட்டத்தை மதித்து நடப்பவர்கள். ஆனால், இந்த பிரதிவாதிகளோ அவரை சார்ந்தவர்களோ, சட்டத்தை சிறிதும்

மதிக்காதவர்கள். அதனால், வாதியின் தாவா பாதை புழக்கத்திற்கு எந்த நேரத்திலும், இடையூறு ஏற்படலாம். அதனால், தாவா வழக்கை பிரதிவாதிகள் பெயரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், 6, 7 பிரதிவாதிகள் பெயரில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்கிறார்கள்.

3. 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–

3.1) வாதியின் வழக்கு தவறான பொய்யான கற்பனையுடன் கட்டுக்கதைகளை ஜோடித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்குரையில் கூறியுள்ள அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை தவறான சங்கதிகள் உள்ளடக்கி சட்டவிதிகளை தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3.2) வழக்குரை பாரா எண்.4ல் சொல்லியுள்ள சர்வே எண்.329/1, 329/2– காலி மனையிடம் என்பதும், அதில் வாதி புழக்கத்தில் உள்ள மெயின்ரோட்டுக்கு வந்து செல்லும் தென்வடல் பாதை என்பது சுத்தப்பொய்யானதாகும். மேற்படி, பாதையின் நீளம் சுமார் 90 அடிகள், கிழமேல் 7 அடி அகலமும் என்பது சுத்தமான பொய்யாகும். அதனை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற தகுதியற்றவர்கள். வாதி கோரும் வழக்கு சொத்துக்கு எவ்வித டைடில் உரிமையும் கிடையாது.

3.3) சர்வே எண்.325/28–வாதிக்கு சொந்தமான இரண்டு செண்ட்ரிங் வீடுகள் உள்ளது. மேற்படி, வீட்டிற்கு தெற்குபுறம் வீட்டின் முகப்பிலேயே ஊராட்சி சாலை செல்கிறது. மேற்படி, பாதையை மனுதாரர் மற்றும் அனைவருக்கும் பொதுவானதாகும். வழக்குரை பாரா 4ல் வாதிக்கு வடபுறம் உள்ள வீட்டிற்கு வாசல் தாவா பாதையை பார்த்து கிழக்கு பக்கமாக உள்ளது என்பதும் பொய்யானதாகும். எதிர்வரும் காலங்களில் புதிய வாசல் அமைத்திட முன்யோசனையுடன் பொய்யாக துலக்கியுள்ளனர். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கு சொத்துக்கு

சம்பந்தப்பட்டவை அல்ல.

3.4) வழக்குரை பாரா 5ல் வாதியின் குடும்பத்தினர் பாதையாக புழங்கி வருவதாக கூறுவது பொய்யானதாகும். வாதிக்கு பாத்தியமான சர்வே எண்.325/28–ல் கீழ்புறம் சந்துக்கு பாதை ஒதுக்காமல் முழு விஸ்தீரணத்தில் வீடு கட்டியுள்ளபடியால் கிழக்குபுறம் வாதிக்கு அனுபவமோ, பாத்தியதையோ கிடையாது.

3.5) வழக்குரை பாரா 6ல் சர்வே எண்.328/28–ல் குளியல் அறை மற்றும் கழிப்பிடமும், மாட்டுக் கொட்டமும் போர்வெல் அனைத்தும் ஒரே சர்வே எண் வாதியின் இடத்திலேயே உள்ளது. சர்வே எண்.328/28க்கு தெற்கே ஊராட்சி சாலையே அவர்களுக்கு பாதையாகும்.

3.6) வழக்குரை பாரா 7ல் வாதிகளின் வீடுகளுக்கும் தாவா பாதைக்கும் தெற்கே மேற்படி, கிழமேல் மெயின்ரோட்டுக்கும் வடக்கே கழிவு நீர் வாய்க்கால் செல்கிறது என்பது உண்மை. ஆனால், அதில் பாதைக்கு சென்றுவர ஒரு சிறிய கான்கிரீட் பாலம் வாதியால் சுமார் 12 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டு வாதியின் புழக்கத்தில் உள்ளது என்பது பொய்யானதாகும். அப்படி போகும் பாலம் இல்லை.

3.7) வாதியின் வழக்குரையுடன் சொல்லியுள்ள சொத்து விபரத்தில் கண்டுள்ள சொத்துக்களில் சர்வே எண்.329/1–இறந்துபோன அழகிச்சிக்கு பட்டா ஏற்பட்டு தற்போது மேற்படி, சொத்து அவரது வாரிசுகளான இந்த 1 முதல் 5 பிரதிவாதிகள் உள்பட மற்றும் மேற்படி, இறந்துபோன அழகிச்சியின் மகன்களான குமார், முன்னமலை, பெருமாள் ஆகியோர்கள் வாரிசுகள். மேற்படி, சொத்தும் மேற்படி குமார், முன்னமலை, பெருமாள் அவர்களின் அனுபோகத்தில் உள்ளது. அவர்கள் வெளிநாட்டில் பணிபுரிகிறார்கள். எனவே, மேற்படி, வழக்கிடைச் சொத்திற்கு உரிய நபர்களை வழக்கில் சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் மேற்படி, வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். மேலும், வழக்கிடைச் சொத்து

சர்வே எண்.329/2–இந்த பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியமானது அல்ல. அந்த இடம் முன்னமலை சுவாமி கும்பிடும் பங்காளிகள் அனைவருக்கும் பொதுவான இடமாகும். எனவே, மேற்படி தாவா இடத்திற்கு உரிய நபர்களை பிரதிவாதியாக சேர்க்காத காரணத்தினாலும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். மேற்படி, இடத்தில் சுமார் 50 வருடத்திற்கு முந்தைய ஓட்டுவீடு (கோவில் வீடு) உள்ளது. இதை வாதி மறைத்துள்ளார்.

3.8) வாதி வழக்கிடைச் சொத்தினை அபகரிக்க வேண்டும். பல உண்மைகளை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளனர். உண்மையிலேயே வழக்கிடைச் சொத்து சர்வே எண்.329/1–இறந்துபோன அழகிச்சியின் அனுபவத்திலிருந்து அவரே வீடு கட்டி குடியிருந்தும் சுமார் 75 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்தும் அதன்பின் அவரின் மகன்களான 2ம் பிரதிவாதி மற்றும் 3, 4, 5ம் பிரதிவாதிகளின் கணவர்கள் அனுபவம் செய்து வாய்க்கராலாக பாகப்பிரிவினை செய்து கொண்டு அவரவர் பழைய வீடுகளில் குடியிருந்து வருகிறார்கள். 3, 4, 5 பிரதிவாதிகளின் கணவர்கள் வெளிநாட்டில் இருப்பதால் அவர்களை தரப்பினராக சேர்க்காமல் பிரதிவாதிகளின் சொத்தை வாதி அபகரிக்க முயற்சிக்கிறார். நில அபகரிப்பு வழக்கு தாக்கல் செய்யும் உரிமையை ரிசர்வ் செய்து கொள்கிறார்கள்.

3.9) வழக்கிடைச் சொத்து பிரதிவாதிகள் தரப்பு ஆவணம் வரைபடத்தில் உள்ளபடி, ஒரே சேகரமாக உள்ளது. அதில் கதவு எண்.1/11, 1/12, 1/10–மின் இணைப்பு எண்.672, 3339, 3527–என்ற வீடுகள் உள்ளன. மேற்படி, வீட்டுக்கு மேற்புரம் உள்ள சுவரிலிருந்து 4 அடிக்கு, பிரதிவாதிகளுக்கு தங்கள் வசதிக்காக மட்டும் பாத்தியமான சந்துள்ளது. மேற்படி, சந்துக்கு மேற்கு பக்கம் வாதியின் வீடும், காலியிடமும் உள்ளது. மேற்படி, சந்து வாதிகளுக்கு உரிமையற்றது. வாதிகள் அவரின் இடத்தின் அளவு இடம்விடாமல் வீடு கட்டிவிட்டார். மேற்படி, சந்து பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியமானதாகும். வழக்கிடைச் சொத்தின் உண்மை

நிலையை நீதிமன்றத்திற்கு தெளிவாக காண்பித்திட நீதிமன்ற ஆணையர்/நில அளவையிட்டால் மட்டுமே முடியும். அதனை வாதி செய்ய தவறிவிட்டார்.

3.10) வழக்கிடைச் சொத்து அரசு கணக்குகளில் புல அளவு சுவடி மற்றும் அ.பதிவேடு, கிராம படம், அடங்கல், சிட்டா, கல் வரைபடம் ஆகியவற்றில் எந்தவிதமான பாதையும் குறிப்பிடவில்லை. மேற்படி, விபரங்களை அரசு ஆவணங்களின் அடிப்படையில் இடத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் பார்வையிட்டால் உண்மை தெளிவாக தெரியும்.

3.11) வழக்கிடைச் சொத்து ஒரு பகுதி மட்டும் அரசு நத்தம் காலிமனையிடமாகும். அதுவும் இந்த வாதிகளின் வீட்டுப்பக்கமில்லை. பிரதிவாதிகளின் வீட்டுக்கு முன்பு கிழக்குப் பக்கம் உள்ளது. மேற்படி, இடம் பிரதிவாதிகளால் சுமார் 75 ஆண்டுகள் அனுபவித்தில் உள்ளது. மேற்படி, இடத்திற்கு பிரதிவாதிகள் அனுபோக அடிப்படையில் அரசிடமிருந்து பட்டா பெற விண்ணப்பத்தை தெரிந்து கொண்டு இம்மாதிரி வாதி இடையூறு செய்கிறார். மேற்படி, இடத்திற்கு பட்டா பிரதிவாதிகள் பெறுவதையோ அல்லது 6, 7ம் பிரதிவாதிகள் பட்டா வழங்குவதையோ தடுத்திட நிறுத்தக் கோரும் உரிமை வாதிக்கு கிடையாது. பட்டா வழங்கும் முறை முற்றிலும் நிர்வாகத்துறை சார்ந்த பகுதியாகும். எனவே, மேற்படி, வழக்கில் 6, 7ம் பிரதிவாதிகள் தேவையற்ற நபராவார்.

3.12) மேலும், வழக்கிடைச் சொத்து சர்வே எண்.329/1–முற்றிலும் அழகிச்சி வாரிசுகளின் முழு சுவாதீனத்தில் உள்ளது. மேற்படி, சொத்துக்கு அரசு விதிகளின்படியும், அரசாணைகளின்படியும் அழகிச்சி வாரிசுகள் பட்டா பெற உரிமையுள்ளவர்கள்.

3.13) பிரதிவாதிகள் மிகவும் ஏழ்மையானவர்கள். அவர்களின் ஏழ்மையையும், பயந்த குணத்தையும் பயன்படுத்தி வாதி அவருடைய மகன்களில் ஒருவர் சார்பு ஆய்வாளராகவும், மற்றொருவர் தலைமை காவலராக தமிழ்நாடு காவல்துறையில்

பணிபுரிந்து வருவதால் அவர்களின் அதிகார பலங்களை கொண்டும், பிரதிவாதிகள் மீது பல பொய் புகார் செய்து மிரட்டி சொத்தை அபகரிக்க முயன்று வருகின்றனர். மேற்படி, வாதியின் ஆட்பலம், பண பலம், அதிகார பலம் ஆகியவற்றின் துணையுடன் சட்டவழிமுறைகளை தவறான வழிகளில் கொண்டு வழக்கு தாக்கல் செய்து இடைக்கால தடையுறுத்துக்கட்டளை பெற்றுள்ளார்.

3.14) உண்மையிலே வழக்கு சொத்து விபரம் பிரதிவாதிகள் தரப்பு ஆவணம். 1ல் கண்ட வரைபடத்தில் உள்ளபடி, ABCD–பிரதிவாதிகளுக்கு சொந்தமான வீடுகள் மற்றும் முன்னமலைசாமி கோவில் வீடும், கொட்டமும் ஆகும். ADEF–வாதி குடியிருக்கும் வீடாகும். AD–வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் பொது அத்துமால் ஆகும். ADGH–பிரதிவாதிகளால் விடப்பட்ட 4 அடி பொது சந்தாகும். AIJD–வாதிகள் பாதை என பொய்யாக கூறும் இடமாகும். GHIJ நிலையான சுவர் உள்ள ஓட்டு வீடுகள், ஓட்டுக்கொட்டம், கோவில் வீடு அடங்கிய பகுதியாகும். ADGH–பிரதிவாதிகளின் தனித்த சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளதாகும். அதில் வாதிக்கு எவ்விதமான உரிமையும் இல்லை.

3.15) வாதி தவறான தகவல் சொல்லி வழக்குரை தாக்கல் செய்துள்ளார். வழக்குரையில் சர்வே எண்.329/2–ல் சுமார் 100 ஆண்டுகளுக்கு முந்தைய ஓட்டு வீட்டுடன் கூடிய கோவில் வீடுள்ளது. மேற்படி, கோவில் வீட்டிற்கு வடக்கு பகுதியில் சர்வே எண்.329/1–உள்ளது. ஆக வாதி கேட்கும் பரிகாரம் கிடைக்க வேண்டுமெனில் சர்வே எண்.329/2, 1 உரிமையாளர் அவசியமானவர். அவசியமான தரப்பினர்கள் சேர்க்காமல் பொய் வழக்கு தாக்கல் செய்து தவறான வழிகளில் சொத்தை அடைய முயன்று வருகிறார். மேலும், வாதி வழக்கிடைச் சொத்தில் பாதை கோர உரிமையற்றவர். வாதியின் சொத்துக்கு ஊராட்சி சாலை உள்ளது. ஊராட்சி விதிகளின்படி, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் & துணை விதிகளின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகளின் சொத்துக்கள்படி,

வாதியின் சொத்தான சர்வே எண்.328/28க்கு பாதை வாதியின் வீட்டிற்கு தெற்கே உள்ளது. மேலும், தமிழ்நாடு ஊராட்சிகள் (பொதுச் சாலைகளின் வகைப்பாடுகள்) விதிகள் 1999, அரசாணை (நிலை) எண்.300ன்கீழ் பொதுச்சாலைகள் வகைப்படுத்தப்பட்டு வாதியின் இடத்துக்கு ஊராட்சி/கிராம ஊராட்சி சாலை உள்ளது. மேற்கண்ட விபரம் கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியமும் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் நகலை பார்வையிட்டாலே நன்கு தெரியும். வாதியின் வீட்டிற்கு பாதையில்லை வழக்கிடைச் சொத்து பாதை என்று கூறி பரிகாரம் பெற வாதிக்கு உரிமையில்லை. வழக்குரையில், வாதி குறிப்பிடும் தென்வடல் 90 அடி கிழமேல் அகலம் 7 அடிக்குள் முன்னமலை சுவாமி கோவில் வீடும், பிரதிவாதிகள் ஓட்டுவீடு, ஓட்டு கொட்டம் அடங்கியுள்ளது. காலியிடமாக இருக்கும் 90 X 4–அடி மட்டும் அதுவும் பிரதிவாதிகளுக்கு சொந்தமானது. எனவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) 7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 6ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:–

4.1) வாதியின் வழக்குரை தவறு. வாதிக்கு எந்த பரிகாரமும் கிடைக்க கூடியதில்லை. வாதியின் வழக்குமூலம் தவறு. நீதிமன்ற கட்டணம் சரிவர செலுத்தவில்லை. அதனால், வாதி கேட்கும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதில்லை.

4.2) வழக்கிடைச் சொத்து மேலூர் வட்டம், சூரக்குண்டு கிராமம் ஆகும். இதன் சர்வே எண்.329/1, 329/2 ஆகும். இதன் பரப்பானது அதாவது சர்வே எண்.329/1 – 0.0306.0 மற்றும் சர்வே எண்.329/2 உள்ள பரப்பு 0.0067.0 ஆகும். இவை இரண்டும் அரசு வருவாய் கிராம பதிவேடுகளில் அரசு புறம்பபோக்கு நத்தம் காலிமனை என்று உள்ளது. பாதை என்று இல்லை.

4.3) மேலும், வழக்கிடை சொத்து சம்பந்தமாக இந்த வாதியும், பிரதிவாதிகளும் அவரவரே தீர்த்துக்கொள்ள வேண்டும். இதை விடுத்து இந்த 6, 7 பிரதிவாதிகளை சேர்த்தது தவறு. தாவா சொத்து வருவாய் பதிவேடுகளில் காலிமனை இடமாகும். அது சர்க்கார் புறம்புகல் ஆகும். அரசு இடத்தை யாரும் ஆக்கிரமிப்பு செய்ய முடியாது. அதன் பூரண உரிமையாளர் அரசாகும். இவற்றை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது.

4.4) மேலும் வாதி கேட்டு இருக்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. எனவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

5.சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்

இவ்வழக்கில் வாதியின் வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கின் வாதி திரு.சாமி சின்னையன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.18 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கின் பிரதிவாதி தரப்பில் யாரும் விசாரிக்கப்படவில்லை. எந்தவொரு ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

06. எழுவினாக்கள்

1) Whether the suit property is in the possession of the plaintiff as stated in the plaint?

2) Whether the plaintiff is entitled to the relief of Permanent Injunction against the defendants No.1 to 5 as prayed for?

3) Whether the plaintiff is entitled to the relief of Mandatory Injunction against the defendants No. 6 & 7 as prayed for?

4) Whether the suit is bad for non joinder of necessary parties?

5) To what other reliefs the plaintiff is entitled for?

7.1) வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, சர்வே எண்.328/28–சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டு வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், தாவா சொத்தான பாதைக்கு கிழக்கே பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட வீடுகள் உள்ளது என்றும், தாவா சொத்தை தான் வாதி பாதையாக பயன்படுத்தி வருகிறார் என்றும், வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே கழிவு நீர் வாய்க்கால் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டதில் மேற்படி, பாதையில் வாதி உபயோகிக்க விடாமல் தடுத்து பிரச்சனை செய்து வருகின்றனர் என்றும், இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது, சிவில் நீதிமன்றத்தை நாட அறிவுறுத்தினர் என்றும், பிரதிவாதிகள் தாவா சொத்தில் சுவர் எழுப்பிவிடுவதாக கூறி வருகின்றனர் என்றும், எனவே, தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கேட்டும், தாவா சொத்தைப் பொறுத்து 6, 7 பிரதிவாதிகள் 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரிலோ அவரது குடும்பத்தினர் பெயரிலோ பட்டா வழங்கக்கூடாது என செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

7.2) பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு ஆவணங்களின்படி, சர்வே எண்.329/1, 329/2–ஆகியவை அரசு புறம்பபோக்கு நத்தம் காலிமனை என்று உள்ளது என்றும், பாதை என்று குறிப்பிடப்படவில்லை என்றும், எனவே, தாவா சொத்தைப் பொறுத்து வாதிக்கு எந்தவொரு உரிமையும் இல்லாத நிலையில், நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கேட்டு வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைக்கக்கூடியதல்ல என்றும் எனவே, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

7.3) வாதி தரப்பில், வாதி திரு. சாமி சின்னையன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 தனது சாட்சியத்தில் வழக்குரையில், குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் 06.08.1969 தேதியில் வழங்கப்பட்ட சாமி சின்னையன் பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 11.05.2017 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரி திட்ட துாய சிட்டா உண்மை நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 07.06.2017 தேதியிட்ட புல எண்.329/1–க்கான நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவடு உண்மை நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 07.06.2017 தேதியிட்ட புல எண்.329/2–க்கான நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவடு உண்மை நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 19.10.2016 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசிது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 01.06.2017 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி வகையறாவிற்கு எதிராக 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த கேவியட் மனு சார்வு நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தாக்கல் செய்த கேவியட் மனு அலுவலக நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கேவியட் சார்வு செய்யாமல் திரும்பி வந்ததற்கான அஞ்சலக கவர் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கேவியட் சார்வு செய்யாமல் திரும்பி வந்ததற்கான அஞ்சலக கவர் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கேவியட் சார்வு செய்யாமல் திரும்பி வந்ததற்கான அஞ்சலக கவர் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 5ம் பிரதிவாதியின் கணவருக்கு அனுப்பிய கேவியட் சார்வு செய்யாமல் திரும்பி வந்ததற்கான அஞ்சலக கவர் வா.சா.ஆ.12 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. 3ம் பிரதிவாதியிடம் இருந்து பெறப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 4ம் பிரதிவாதியிடம் இருந்து பெறப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 5ம் பிரதிவாதியிடம் இருந்து பெறப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 22.05.2017 தேதியிட்ட கதவு எண்.1/14–க்கான எனது பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 22.05.2017 தேதியிட்ட கதவு எண்.1/15–க்கான எனது பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தினை காட்டக்கூடிய புகைப்படங்கள் (எண்ணிக்கை 4) வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7.4) பிரதிவாதி தரப்பில், யாரும் விசாரிக்கப்படவில்லை. எந்தவொரு ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>8. எழுவினாக்கள் 1, 2, 4ற்கான தீர்வு</u> :–

1) Whether the suit property is in the possession of the plaintiff as stated in the plaint?

2) Whether the plaintiff is entitled to the relief of Permanent Injunction against the defendants No.1 to 5 as prayed for?

4) Whether the suit is bad for non joinder of necessary parties?

8.1) இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் சர்வே எண்.328/18–ல் உள்ள சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்கதியாகும்.

8.2) முதலாவதாக, இந்த வழக்கில், அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனரா என்ற எழுவினா சம்பந்தமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, அசல் வழக்கானது வாதியால் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக

தாக்கல் செய்யப்பட்டு தாவா சொத்து சம்பந்தமாக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் மட்டுமே கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா பாதைக்கு இடையூறு செய்து பிரச்சனை செய்ததால் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என வாதி தரப்பில் வாதிடும் வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலேயே உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

8.3) அடுத்ததாக, வாதி தரப்பில், தாவா சொத்திற்கு மேற்கே வாதியின் சொத்து உள்ளது என்றும், தாவா சொத்தான சர்வே எண்.329/1, சர்வே எண்.329/2–ல் உள்ள காலிமனையிடமான வாதி புழக்கத்தில் உள்ள மெயின் ரோட்டிற்கு வந்து செல்லும் பாதை என்றும், தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் இடையூறு செய்கின்றனர் என்றும், தாவா சொத்தைப் பொறுத்து 6, 7 பிரதிவாதிகள், 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயருக்கு பட்டா வழங்கக் கூடாது என பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றும் வாதிடப்படுகின்றது.

8.4) மாறாக, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களான சர்வே எண்.329/1, சர்வே எண்.329/2–ல் உள்ள சொத்துக்களானது வருவாய் கிராம பதிவேடுகளில் அரசு புறம்போக்கு நத்தம் காலிமனை என்று உள்ளது என்றும், பாதை என்று இல்லை என்றும், எனவே, வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும் வாதிட்டார்.

8.5) மேலும், 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில், சர்வே எண்.329/1–யைப் பொறுத்து இறந்துபோன அழகச்சி என்பவருக்கு பட்டா ஏற்பட்டு தற்போது மேற்படி சொத்து அவரது வாரிசுகளான 1 முதல் 5 பிரதிவாதிகள் உட்பட இறந்துபோன அழகச்சியின் மகன்களான குமார் முன்னமலை, பெருமாள் ஆகியோர்களின் அனுபவத்தில் உள்ளது என்றும்,

சர்வே எண்.329/2–யைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியமானது அல்ல என்றும், முன்னமலை சாமி கும்பிடும் பங்காளிகள் அனைவருக்கும் பொதுவான இடம் என்றும், மேற்படி, இடத்தில் 50 வருடத்திற்கு முந்தைய ஓட்டுவீடு கோவில் உள்ளது என்றும், வாதி அதை மறைத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சர்வே எண்.329/1, சர்வே எண்.329/2–ல் உள்ள சொத்துக்கள் ஒரு சேகரமாக உள்ளது என்றும், கதவு எண்.1/11, 1/12, 1/10, மின் இணைப்பு எண்.672, 3339, 3537 ஆகிய வீடுகள் உள்ளது என்றும், மேற்படி வீடுகளுக்கு மேல்புறம் மேற்படி சுவற்றிலிருந்து 4 அடிக்கு பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியமான சந்து உள்ளது என்றும், மேற்படி, சந்தில் வாதிக்கு உரிமை இல்லை என்றும், வாதி இடம் விடாமல் வீடு கட்டியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8.6) வா.சா.ஆ.1 மனைவரி தோராயப்பட்டாவை பரிசீலனை செய்து பார்க்கும்போது, சர்வே எண்.328/28–க்கான வாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டா என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 ஆவணமானது வாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா என்பது தெரிய வருகின்றது. சர்வே எண்.328/28 சொத்தானது வாதி பெயரில் பட்டா ஏற்பட்டு வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பது மறுக்கப்படவில்லை.

8.7) வா.சா.ஆ.3 ஆவணமானது சர்வே எண்.329/1–க்கான நத்தம் நிலவரித் திட்ட தூய அடங்கல் பதிவேடு என்பதும், வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி, காலிமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. வா.சா.ஆ.4 ஆவணமானது சர்வே எண்.329/2–க்கான நத்தம் நிலவரித் திட்ட தூய அடங்கல் பதிவேடு என்பதும், வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி, காலிமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகின்றது.

8.8) வாதி தரப்பில் வாதிடும் வாதமான சர்வே எண்.329/1 மற்றும் சர்வே

எண்.329/2 சுமார் 90 அடி தென்வடல் நீளமும், 7 அடி அகலமுள்ள பாதை என்பதை நிரூபிக்கும் வகையில், சர்வே எண்.329/1 மற்றும் சர்வே எண்.329/2 ஆகியவற்றைப் பொறுத்து வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆகிய ஆவணங்களை தவிர வேறு எந்த ஆவணங்களும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்களிலும் காலிமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர பாதை என்று குறிப்பிடப்படவில்லை.

8.9) இந்த வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், வாதியின் வழக்குரையுடன் சொல்லியுள்ள சொத்து விபரத்தில் கண்டுள்ள சொத்துக்களில் சர்வே எண்.329/1–இறந்துபோன அழகிச்சிக்கு பட்டா ஏற்பட்டு தற்போது மேற்படி, சொத்து அவரது வாரிசுகளான 1 முதல் 5 பிரதிவாதிகள் உள்பட மற்றும் மேற்படி, இறந்துபோன அழகிச்சியின் மகன்களான குமார், முன்னமலை, பெருமாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்றும், அவர்கள் தற்போது மேற்படி, சொத்தும் மேற்படி குமார், முன்னமலை, பெருமாள் அவர்களின் அனுபோகத்தில் உள்ளது என்றும், அவர்கள் வெளிநாட்டில் பணிபுரிகிறார்கள் என்றும், எனவே, மேற்படி, வழக்கிடைச் சொத்திற்கு உரிய நபர்களை வழக்கில் சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் மேற்படி, வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும் என்றும், மேலும், வழக்கிடைச் சொத்து சர்வே எண்.329/2– இந்த பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியமானது அல்ல என்றும், அந்த இடம் முன்னமலை சுவாமி கும்பிடும் பங்காளிகள் அனைவருக்கும் பொதுவான இடமாகும் என்றும், எனவே, மேற்படி தாவா இடத்திற்கு உரிய நபர்களை பிரதிவாதியாக சேர்க்காத காரணத்தினாலும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும் என்றும், மேற்படி, இடத்தில் சுமார் 50 வருடத்திற்கு முந்தைய ஓட்டுவீடு (கோவில் வீடு) உள்ளது என்றும், இதை வாதி மறைத்துள்ளார் என்றும், வாதி வழக்கிடைச் சொத்தினை அபகரிக்க வேண்டும்

என பல உண்மைகளை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றும், உண்மையிலேயே வழக்கிடைச் சொத்து சர்வே எண்.329/1–இறந்துபோன அழகிச்சியின் அனுபவத்திலிருந்து அவரே வீடு கட்டி குடியிருந்தும் சுமார் 75 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்தும் அதன்பின் அவரின் மகன்களான 2ம் பிரதிவாதி மற்றும் 3, 4, 5ம் பிரதிவாதிகளின் கணவர்கள் அனுபவம் செய்து வாய்க்கராலாக பாகப்பிரிவினை செய்து கொண்டு அவரவர் பழைய வீடுகளில் குடியிருந்து வருகிறார்கள் என்றும், 3, 4, 5 பிரதிவாதிகளின் கணவர்கள் வெளிநாட்டில் இருப்பதால் அவர்களை தரப்பினராக சேர்க்காமல் பிரதிவாதிகளின் சொத்தை வாதி அபகரிக்க முயற்சிக்கிறார் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

8.10) அதாவது, 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின்படி, சர்வே எண்.329/1 மற்றும் சர்வே எண்.329/2 ஆகிய சொத்தைப் பொறுத்து வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்று மறுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பிரதிவாதிகள் தரப்பில் அதன்பின்பு, வழக்கை தொடர்ந்து நடத்தாததால் 1 முதல் 5, 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

8.11) இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் தாவா சொத்தான சர்வே எண்.329/1 மற்றும் சர்வே எண்.329/2 சுமார் 90 அடி தென்வடல் நீளமும், 7 அடி அகலமுள்ள பாதை என்பதை நிரூபிக்கும் பொறுப்பானது வாதியையே சார்ந்ததாகும். ஆனால், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6, வா.சா.ஆ.16, வா.சா.ஆ.17 ஆகிய ஆவணங்கள் வாதி பெயரில் உள்ள சொத்துக்குரிய ஆவணங்களாகவே தெரிய வருகின்றது. வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.15 வரையான ஆவணங்கள் இந்த பிரச்சனை சம்பந்தமாக வாதி மற்றும் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கேவியட் மனு சம்பந்தப்பட்டது என்பது தெரிய வருகின்றது.

8.12) இந்த சூழ்நிலையில், சர்வே எண்.329/1 மற்றும் சர்வே எண்.329/2 ஆகியவற்றைப் பொறுத்து வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்களிலும் காலிமனை என குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர பாதை என்று எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

8.13) மேலே கண்டவற்றை பரிசீலனை செய்து பார்க்கும்போது, சர்வே எண்.329/1 மற்றும் சர்வே எண்.329/2 சுமார் 90 அடி தென்வடல் நீளமும், 7 அடி அகலமுள்ள பாதை என்பதை நிரூபிக்கும் வகையில், வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆகிய ஆவணங்களை தவிர வேறு எந்த ஆவணங்களும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும், வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்களிலும் காலிமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர பாதை என்று குறிப்பிடப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும், வா.சா.1 குறுக்கு விசாரணையில், சர்வே எண்.329/1 மற்றும் சர்வே எண்.329/2 ஆகியவை தற்சமயம் வரை வருவாய் ஆவணங்களில் கிராம நத்தமாக உள்ளது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், பரிசீலனை செய்து பார்க்கும்போது, சர்வே எண்.329/1 மற்றும் சர்வே எண்.329/2 சுமார் 90 அடி தென்வடல் நீளமும், 7 அடி அகலமுள்ள பாதை உள்ளது என்ற வாதி தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

8.14) எனவே, தாவா சொத்தான பாதையில், வாதியின் உரிமை மற்றும் அனுபவத்திற்கு 1 முதல் 5 பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ இடையூறு செய்யக்கூடாது என வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, எழுவினா 4யைப் பொறுத்து வாதிக்கு ஆதரவாகவும், எழுவினாக்கள். 1, 2 ஆகியவற்றைப் பொறுத்து வாதிக்கு எதிராகவும் தீர்வு காணப்படுகிறது.

9. எழுவினா 3ற்கான தீர்வு :–

3) Whether the plaintiff is entitled to the relief of Mandatory Injunction against the defendants No. 6 & 7 as prayed for?

9.1) இந்த வழக்கில் வாதி தரப்பில் தாவா சொத்தைப் பொறுத்து 6, 7 பிரதிவாதிகள், 1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரிலோ, அவரது குடும்பத்தினர் பெயரிலோ பட்டா வழங்கக்கூடாது என செயலுறுத்து கட்டளைப் பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது.

9.2) இது சம்பந்தமாக குறித்தவகை நிவாரணச் சட்டம் பிரிவு 41 ஆனது கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துள்ளது.

41. Injunction when refused.—An injunction cannot be granted—

(a) to restrain any person from prosecuting a judicial proceeding pending at the institution of the suit in which the injunction is sought, unless such restraint is necessary to prevent a multiplicity of proceedings;

(b) to restrain any person from instituting or prosecuting any proceeding in a court not subordinate to that from which the injunction is sought;

(c) to restrain any person from applying to any legislative body;

(d) to restrain any person from instituting or prosecuting any proceeding in a criminal matter; (e) to prevent the breach of a contract the performance of which would not be specifically enforced;

(f) to prevent, on the ground of nuisance, an act of which it is not reasonably clear that it will be a nuisance;

(g) to prevent a continuing breach in which the plaintiff has acquiesced;

(h) when equally efficacious relief can certainly be obtained by any other usual mode of proceeding except in case of breach of trust;

(ha) if it would impede or delay the progress or completion of any infrastructure project or interfere with the continued provision of relevant facility related

thereto or services being the subject matter of such project.

(i) when the conduct of the plaintiff or his agents has been such as to disentitle him to be the assistance of the court;

(j) when the plaintiff has no personal interest in the matter.

9.3) அதாவது, மேலே கண்ட குறித்தவகை நிவாரணச் சட்டம் பிரிவு 41(c)–ன்படி, சட்டப்படியான அமைப்பு எதற்கும், விண்ணப்பிப்பதிலிருந்து நபர் யவரையும் தடையுறுத்திட வழங்கப்பட இயலாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

9.4) மேலும், இந்த வழக்கில் வா.சா.1 குறுக்கு விசாரணையின்போது, "தாவா சொத்தைப் பொறுத்து 6, 7 பிரதிவாதிகள் யாருக்கும் பட்டா கொடுக்கவில்லை என்றாலும், தற்போது வரை தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் கிராம நத்தமாக இருந்து வருகிறது என்றாலும் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9.5) இந்த வழக்கு வாதி தரப்பில் 6, 7 பிரதிவாதிகள், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கோ அவரது குடும்பத்தினர் பெயரிலோ பட்டா வழங்கக்கூடாது என வாதி கோரியுள்ள பரிகாரமானது குறித்த வகை நிவாரணச் சட்டம் பிரிவு 41(c) ன் அடிப்படையில் பார்க்கும்போது ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லை. எனவே, வாதி கோரும் பரிகாரமான 6, 7 பிரதிவாதிகள், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கோ அவரது குடும்பத்தினர் பெயரிலோ பட்டா வழங்கக்கூடாது என்ற செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரமானது வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, எழுவினா.3–யைப் பொறுத்து வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

<u>10. எழுவினா 5ற்கான தீர்வு</u> :

5) To what other reliefs the plaintiff is entitled for?

எழுவினாக்கள் 1, 2, 3 ஆகியவற்றைப் பொறுத்து வாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு

கிடைக்கக் கூடியதல்ல என்று எழுவினா 5–யை பொறுத்து இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.03.26 17:56:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>

1.வா.சா.1 – திரு.சாமி சின்னையன்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

வாதி தரப்பு சான்றாவணம்	தேதி	ஆவண விபரம்	குறிப்பு
வா.சா.ஆ.1	06.08.1969	சாமி சின்னையன் பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா.	அசல்.
வா.சா.ஆ.2	11.05.2017	வாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா.	உண்மை நகல்.
வா.சா.ஆ.3	07.06.2017	புல எண்.329/1–க்கான நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேடு.	உண்மை நகல்.
வா.சா.ஆ.4	07.06.2017	புல எண்.329/2–க்கான நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேடு.	உண்மை நகல்.
வா.சா.ஆ.5	19.10.2016	வாதி பெயரில் உள்ள மின் கட்டண இரசீது.	அசல்.
வா.சா.ஆ.6	01.06.2017	வாதி பெயரில் உள்ள மின் கட்டண இரசீது.	அசல்.
வா.சா.ஆ.7	–––––––––	வாதி வகையறாவிற்கு எதிராக 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த	சார்வு நகல்.

		கேவியட் மனு.	
வா.சா.ஆ.8	----------	வாதி தாக்கல் செய்த கேவியட் மனு.	அலுவலக நகல்.
வா.சா.ஆ.9	----------	1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கேவியட் சார்வு செய்யாமல் திரும்பி வந்ததற்கான அஞ்சலக கவர்.	அசல்.
வா.சா.ஆ.10	----------	2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கேவியட் சார்வு செய்யாமல் திரும்பி வந்ததற்கான அஞ்சலக கவர்.	அசல்.
வா.சா.ஆ.11	----------	3ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கேவியட் சார்வு செய்யாமல் திரும்பி வந்ததற்கான அஞ்சலக கவர்.	அசல்.
வா.சா.ஆ.12	----------	5ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கேவியட் சார்வு செய்யாமல் திரும்பி வந்ததற்கான அஞ்சலக கவர்.	அசல்.
வா.சா.ஆ.13	----------	3ம் பிரதிவாதியிடம் இருந்து பெறப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை.	அசல்.
வா.சா.ஆ.14	----------	4ம் பிரதிவாதியிடம் இருந்து பெறப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை.	அசல்.
வா.சா.ஆ.15	----------	5ம் பிரதிவாதியிடம் இருந்து பெறப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை.	அசல்.
வா.சா.ஆ.16	22.05.2017	கதவு எண்.1/14-க்கான வாதி பெயரில் உள்ள வீட்டுவரி இரசீது.	அசல்.
வா.சா.ஆ.17	22.05.2017	கதவு எண்.1/15-க்கான வாதி பெயரில் உள்ள வீட்டுவரி இரசீது.	அசல்.

வா.சா.ஆ.18	----------	தாவா சொத்தினை காட்டக்கூடிய புகைப்படங்கள் (எண்ணிக்கை 4)	அசல்.

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : இல்லை.

பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை.

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.03.26 17:56:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்
அசல் வழக்கு எண். 172/2017
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் 26.03.2026